உ

ஓம் கணபதி துணை.

ஸ்ரீ சிவ சண்முக பெருமான் துணை.

திருச்சிற்றம்பலம்.



ஸ்ரீ தாலமா நகரமென்னும் பளப்பாகையின்கண்

திருக்கோயில் கொண்டெழுந்தருளிய

ஸ்ரீ சௌந்தரி அம்மையார் சமேதராகிய ஸ்ரீ மாயூர காரதர்

ஆலயத்தில் திருவருள் சுரந்து எழுந்தருளி இருக்கும்

ஸ்ரீ வள்ளி, தெய்வயானை சமேதராகிய

ஸ்ரீ சிவ ஷண்முக பெருமான் பேரில்

# ஞானநந்த
# தோத்திர கீர்த்தனை.

இஃது

ஷை கிராமத்தில்

சில பெரியோர்கள் கேட்டுக்கொண்ட வண்ணம்

ஷையூர் செங்குந்த மரபு

ம-ள-ள-ஸ்ரீ சந்து. கிருஷ்ணப்ப முதலியார் குமாரரும்

ஸ்ரீமத் மகா வித்வான்

ம-ள-ள-ஸ்ரீ மோ. நாராயண முதலியார், மாணாக்கராகிய

ஸ்ரீமத் மகாவித்வான்

...ன்னையா முதலியாரவர்களால்,

இயற்றப்பட்டது.

டவுன் பிரஸ், காஞ்சிபுரம்.

1928

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JAN 1928
MADRAS

37
537
1973
2b:417
N28
148445

உ

ஓம் கணபதி துணை.

ஸ்ரீ சிவ சண்முக பெருமான் துணை.

திருச்சிற்றம்பலம்.



OFFICE OF THE
23
MA

ஸ்ரீ தாலமா நகரமென்னும் பனப்பாகையின்கண்
திருக்கோயில் கொண்டெழுந்தருளிய
ஸ்ரீ சௌந்தரி அம்மையார் சமேதராகிய ஸ்ரீ மாயூர நாரதர்
ஆலயத்தில் திருவருள் சுரந்து எழுந்தருளி இருக்கும்
ஸ்ரீ வள்ளி, தெய்வயானை சமேதராகிய
ஸ்ரீ சிவ ஷண்முக பெருமான் பேரில்

# ஞானாநந்த தோத்திர கீர்த்தனை.

இஃது
ஷை கிராமத்தில்
சில பெரியோர்கள் கேட்டுக்கொண்ட வண்ணம்
ஷையூர் செங்குந்த மரபு
ம-ா-ா-ஸ்ரீ சந்து. கிருஷ்ணப்ப முதலியார் குமாரரும்
ஸ்ரீமத் மகா வித்வான்
ம-ா-ா-ஸ்ரீ மோ. நாராயண முதலியார், மாணாக்கராகிய
ஸ்ரீமத் மகாவித்வான்
சின்னையா முதலியாரவர்களால்,
இயற்றப்பட்டது.

டவுன் பிரஸ், காஞ்சிபுரம்.

1928

உ

கணபதி துணை.

வெண்பா

ஆ[illegible] தாலப் புரியிலுறை ஷண்முகன்மேல்
பாமேவு பன் னிசைகள் பாடவே—மாமேவும்
பானைவயர் மும்மதத்துப் பாசாங் குசத்தாதா
ஆனைமுக நாதா அருள்.

கண நாதா அருள் என்ற வர்ணமெட்டு.

பல்லவி

| | | |
|---|---|---|
| அருள் செய்வாய் | கணபதி | அருள் செய்வாய் |

அனுபல்லவி

| | | | |
|---|---|---|---|
| பசுபதி | ஆதிநீதி | ஜோதி ஜாதி | அருள் செய்வாய் |
| மறைதேருள் | ஆ ஆ | பறைதேட ஐந்துகரனே | ஆனைமுகனே |
| இதுவேளை | ஆ ஆ | இதுவேளை | |
| வந்து | யீசனே | ஜெகதீசனே நீ | அருள் செய்வாய் |
| ஓங்கார | ஆ ஆ | ஓங்கார | |
| மறை | ஓதுபாத | நாத கீத | அருள் செய்வாய் |
| சின்னையன் | ஆ ஆ | சின்னையன் | |
| துதி | செய்ய சிந்து | அய்ய வந்து | அருள் செய்வாய் |

பரமசிவன் துதி.

பழனிமா மலையில் வாழு—மெட்டு.

பல்லவி

| | | |
|---|---|---|
| சம்போ சங்கர | மஹா தேவ நீ வா வா | |
| தேவா நீ வா வா | தெளிவுரக்கா வா | சம்போ |

சரணம்

| | | |
|---|---|---|
| தும்பை மரு மல்லிகை | மாலைகள் துலங்க | |
| அம்புலி சடைமுடி | அறவணி யிலங்க | சம்போ |
| நந்தி முனிவர்கண | நாதரும் போற்ற | |
| இந்திரன் முதலியோ | ரிமையவரேற்ற | சம்போ |
| அம்பிகை யுடன்திரு | ஆறுகந் தேரி | |
| கம்பும் சின்னையனை | நாடிட வாரீர் | சம்போ |

## உமையவள் துதி.

சம்போ சிவ கணபதி—யென்ற மெட்டு.

பல்லவி

அம்பாள் பரமேஸ்வரி உனை நம்பினேன் வந்தாதரி அம்

சரணம்

அம்புவி கதிர் நிரை அண்ட பிண்ட மடுத்த
செம்மை நிலமுழுதும் செழிக்க அறம்வளர்த்த அம்
ஓங்காரத்துள்ளெழுந்து உத்தமருளத்துறையும்
பூந்தாள் சதங்கை பணி புதுமலர்கள் நிரையும் அம்
பாலன் சின்னையன் துதி பலமுறை செய்யநீரும்
ஜாலம் செய்யாமல் இந்த சமயம் வந்தருள்தாரும் அம்

## நடராஜர் துதி.

ராகம் கல்யாணி—தாளம் ரூபகம்.

பல்லவி

நடனமாடினார் நடராஜர் நடனமாடினார்

அனுபல்லவி

பொர்ப்புரு அர்ப்புத சபைதனில் நடனமாடினார்
தத்திமி தக்கிட தகஜெனு தகதிமி தகஜெனு தாகிட
தித்தளாங்கு திமிதளாங்கு திங்தோம் திங்தோம் மென்று நடன

சரணம்

மடலவிழ்க்கொன்றை மாலை யரிய
மான் மழுதிருக் கரத்திற் றெரிய
விடவற வணி பணியும் உரிய
விளங்கு வாறெழில் சடையும் விரிய

அண்டர்கள் துயரினை நோக்கி அன்பர்கள் வினைகளை போக்கி
கண்டகன் மேல் பதந்தாக்கி கருணைசெய் திருப்பதந்தூக்கி

தத்தரி தக்கிட தகஜெனு தாகிட ஜேகிட ஜம்தரி
திக்கெணங்கு திகுகெணங்கு திங்தோம் திங்தோ மென்று நடன
பதஞ்சலி புலி பாடுந்தாதா
பன்னிரு கையனருளும் நாதா
விதமரி காளி வெட்கும் விநோதா
விளங்கும் மறைகள் பொருந்தும் பாதா
நாரதர் கின்னரர் கூட நந்தியும் மத்தளம்போட
ஆரணநாரண நாட அருள்பெற சின்னையன்பாட
தத்திமி தக்கிட ஜேகிட தாகிட ஜேகிட ஜேம்தரி
தித்தரி தின்ன தின்ன தின்ன தின்ன வென்று நடன

விருத்தம்.

நடராஜா நடவேழுந்து அலங்கார வேண்டுகோள் துதி.

ஓதிடு குருமை மாவடுகாடின் ஓதரியாருனை காவாய்
நீதியாய் மூவேழெழுத்தினில்பதிந்த நீ நடுவெழுத்தெனக்கருள்வாய்
மீதி இவ்வீரேழ் எழுத்தினுல்மேய எழுத்தணிதேரியு நடித்தும்
காதலாய் நரியோடானை தோல்போர்த்து காய்ந்தருள் நடன
சிற்பரனே.

வசனம்.

செல்லுதற்கரிய இளமையான மிருகங்கள் வாழும் காட்டில் அகப்பட்டு உனைதுதிக்க அரியாதவனாய் திகைக்கும் என்னை காப்பாற்றுவாய்.

| | | |
|---|---|---|
| ஓ | தி | டு |
| மை | ரு | கு |
| மா | வ | டு |
| ன் | டி | கா |
| ஓ | த | ரி |
| னை | ரு | யா |
| கா | வா | ய் |

## சிவகாமி, லட்சுமி, சரஸ்வதி, நால்வர் துதி.

விருத்தம்

கந்தமூஞ் சாந்தும்வேய்ந்த கலைமகள்பாதம்போற்றி
சுந்தரி சிவகாமித்தாய் துணைமலரடிகள் போற்றி
செந்திரு மகள்பாதத்தை சிந்தையிலிருத்தியீசன்
சொந்தமாயாண்ட நால்வர் துணையடி போற்றி போற்றி.

அவையடக்கம்

கோலமா திருவர்சூழ குலர்வியே மயிலின்மீது
தாலமா புரியில்மேவும் ஷண்முகன் பதங்களேற்க
சாலமாப்பெரியோர் கேட்கச் சாச்சி சோச்சென்றுகொஞ்சும்
பாலனைப் போலெயானும் பரிவுடன் வுறைத்திட்டேனே.

சீர்சிறக்குமேனி—என்ற மெட்டு.

சீறணிந்த மா முடி முடி புனை
ஆறும் செய்ந்தொளிர் முகம் முகந்தனில்
சேயபுண்டரம் தனில் தனிலெழும்
நிறைவான

மாரிபோல் வரந் தரு தருமெனும்
வாயில்புன்னகை சரி சரி என
வாய்ந்தகாதினில் குழை குழை யதி
னொளிவீச

நீறணிந்த மேனி பளீர் பளீரென
தாறணிந்ததோளில் விடா விடா துற
நேரிலக்குமா மணி மணி வடம்
அழகான

சேர்ந்தபல்நிறக் கலன் கலன் இனம்
ஆர்ந்தபூண்வளர் கறம் கறந்தனில்
திங்கணைத்தையும் உனும் உனும்கதிர்
வடிவேலும்

தீர்ந்தகிண்கிணி கலீல் கலீலென
பாதபங்கயம் செவேல் செவேலென
தேய்ந்தநுண்ணிடை மலர் மலர்புது
மணம்வீசும்

காறவாங்குழல் கிளர் கிளர்ந்திடும்
மாதுவள்ளியின் பெரும் பெருந்திரு
காவின்யானைமா துமை யுமையொடும்
நடமாடும்

நேரேயெங்கனம் வலம் வலம் வரு
சேரடல்பெரும் மயில் மயில் மிசை
நீரும்நீங்கிடா தருள் அருள் செயும்
முருகேசா

சார்ந்தலர் சினை தரு தருமிகும்
தாலபுரியில்வாழ் குகா குகாயென
சாற்றும்சின்னய்யன் துதி துதிக்கருள்
பெருமாளே.

மயிலேறி வந்த—வர்ணமெட்டு

பல்லவி

உமையாள் தனக்கு மகனுய் உதித்தவனே வா வா சத்திவேலவா

சரணம்

அமறரிடர் தீர்த்தவனே ஆறுமுகமானவனே உமை
வள்ளிகுஞ்சரி லோலா வையகம் புகழும்வேலா உமை
தாதார் வனங்கள்சூழும் தாலபுரியில் வாழும் உமை
பாலன் சின்னையன் துதி பாடவருள்தாரும் கெதி உமை

அம்பிகா உன்மகன் குகன்—என்ற வர்ணமெட்டு.

பல்லவி

அப்பனே பன்னிருகைய்யா ஒப்பில்லா பாதத்தா மெய்யா.

சரணம்

எப்போது வருவாயென்று ஏங்குதே அய்பாநெஞ்சம்
செப்பாய்உன் வாய்திறந்து தேசிகா என்முன்னேகொஞ்சம் அ
பொய்யானகாயம் மிது பூவுலக மாயைவிட்டு
மெய்யான உந்தன்பாதம் மேவுகின்ற வழியைகாட்டு அ

பஞ்சுபடும் பாடுபட்டு பதைக்குதே னெஞ்சமைய்யா
அஞ்சலென்று வேலெடுத்து ஆண்டியே வந்தாண்டிடைய்யா அ
தொண்டன் சின்னையன்முன்னே தோகைமயிலிலேரி நீறும்
சண்டன் வாராமல்போக்கி ஷண்முகனேவந்து காரும் அ

ஏறுமயிலேரி—என்ற வர்ணமெட்டு.

கண்ணி சிந்து.

வாலதிரிபுறை மகனுய் வந்த பன்னிருகைய்யா
யேலவார்குழல் வள்ளி தெய்வானை
கிசைந்தவேல் முருகையா வாலதிரி

ஞாலநான்மறை முதலாய் உனை நான்முகன் தினம்போற்ற
ஆலமுண்டகண்டன் வேண்ட
அரும்பொருளிதுவென சாற்றும் வாலதிரி

சீல முனிவர்கள் போற்றுஞ் சின்மய சர்க்குருபோதா
மூலகாரண மாயெழுந்த
முதலே ஷண்முகநாதா வாலதிரி

பாலன் சின்னையன் துதிக்க பணியணி மயில்மிசை நீரும்
தாலைபுரியினில் மேவிவாழும்
சரஹணபவனே வாரும் வாலதிரி

காவடிச்சிந்து.

தாவடம் தன்னை நீவிடடி—என்ற மெட்டு.

பல்லவி

ஆருமுகமான முருகையா பன்னிருகையா யிதென்னபொய்யா
அன்பருளத்தில் வாழ்ந்திடு மெய்யா—உன்
ஆறெழுத்தும் பிறணவத்தோடன்புடனே ஜெபித்திட
நேரதாக மயிலின்மேல் நீ விளையாடி வந்தருள் (ஆருமுக)

அஞ்சிபத்தோரக்ஷரம் தொடர்ந்து அதைக்கடந்து
[அப்பால் படர்ந்து
ஆடுகின்றவாசிமேல் நடந்து—அங்கு
ஆனந்தமாய் பொங்கிவரும் அமுதகிறணபாலை உண்டு
தானதுவாகயிருக்க ஷண்முகனே வந்தருள்செய் (ஆருமுக)

மோன வெளியிலாடிடு மணியே உனக்கிணையே துணையிலையே
முத்தி தந்திடும் வித்தகமணியே—என்று
ஓடிடாத நவமணியே ஒப்பிலா சண்முகமணியே
சாமி குருவாம்மணியே சமயம் வந்தருள் நீ துணையே (ஆறுமுக)

கானகந்தன்னில் வள்ளியைத்தேடி எங்கனும்ஓடி உன்மனம்வாடி
கருணை செய்யெனமானெனக்கூடி—நீ
காட்டிய வுன் திருவுருவை கருணைபெருகி கிருபைசெய்ய
தேட்டமுடன் சின்னையன்முன் சேவைதந்து ஆளவாரும் (ஆறுமுக)

தசரதராஜ குமாரா—என்ற வர்ணமெட்டு.

பல்லவி

சாமி ஷண்முகவடிவேலா உமைபாலா அனுகூலா வள்ளிலோலா.

சரணம்

காமியாகிபற சிவ[...]ணையுகந்து
காட்டெனப்பிறணவ பொருளென மகிழ்ந்து
தாமிதுவெனவுந்தன் வாய்தனைத்திறந்து
தயவு செய்தருளியநாதா பிறக்கியாதா குருநாதா வறம் நீ தா (சாமி)

வள்ளி வாழ்ந்திடுபற னெங்கெனத்தேடி
வானரசளித்திடு மாதொடுங்கூடி
துள்ளிய மயில்மிசை யுகந்துனை நாடி
துதி செய்யுமவர்க்கருளையா அருள்மெய்யா மிகுதய்யா
[வினைகொய்யா (சாமி)

மாலயன் முனிவர்கின் னமரரும்கூட
வானுதலரம்பையர் முதலவராட
சாலநின்புகழைச் சின்னையன் கொண்டாட
தயவு செய்தருள் ஜெகதீசா விசுவேசா பவநாசா அருள்நேசா (சாமி)

கந்தா வந்தருளே—என்ற மெட்டு.

பல்லவி

சறஹணபவனே எனையாளும் ஷண்முகனே
சிறந்ததவத்துறை திருந்ததத்தியர் நிறைந்தநற்றமிழ்
[பொருந்தளித்திடும் (சர)

[redacted]

பொங்கரவனரியுமெழில் பொருந்துமம்புலியும்
இங்கிதமொழி மங்கைதங்குற
பங்களித்திடும் சங்கரனருள் (சரஹண)

வாலதிரிபுரை சிறுமகனுமர்யுறை
சாலநின்பதம் ஓலமென்றிடும்
மேலவர்க்கருள் சீலனே வளர் (சரஹண)

மன்னும் சோலை சூழ் எழில் மாபனசைவாழ்
உன்னதமுள சொன்னய முற
சின்னையன் துதி பன்ன வந்தருள் (சரஹண)

பச்சை மயிலிலேறி—என்ற மெட்டு.

பல்லவி

ஒய்யார வேல்முருகா மைய்யாருமால் மருகா
ஓங்காரமாய் உதித்தவா வொளி பெருகும் காங்கேயனுய் ஜெனித்தவா

உத்தம பக்தரை முக்தியளித்திடும்
சத்தியவித்தக அற்புதமணியே
உண்மையானந்த வொளியே உனதுபாதம்
ஒளியாதருளும் வெளியே (ஒய்யார)

நெத்திக்கு நேர் நடுவே சித்திரகூடந் தன்னில்
நீ விளையாடும் பதியே அன்பருளத்தில்
நீங்காதருளும் நிதியே
நங்கையு மிங்கித கெங்கையும் பொங்கற
திங்களும் தங்குறு சங்கரனருளிய
நித்தியானந்தவுருவே உலகுக்கெல்லாம் பத்திதந்தாளும் குருவே (ஒய்யார)

கன்னல் வயலில் சூழும் அன்னம் மறைகள் வாழும்
காக்ஷிமிக வெழுந்தொளிர் தாலை நகரில் மாக்ஷிமையாகவே வளர்
கடிமிகு தடவறை யிடிபடு பொடிபட
அடியுடை மயில்மிசை நடமிடுமரசே
கருணையானந்த பூபதி சின்னையன் துதி
பரவ அருள் செய் நீ கெதி (ஒய்யார)

ஆண்டி பண்டாரம்—என்ற மெட்டு.

பல்லவி

வேல் முருகைய்யா இந்த வேளை வா மெய்யா (வேல்)

சரணம்.

சேல்நிகர்த்த கண்மடவார் சிறுவர் அறுவர் தந்த
பாலையுண்டு அன்பு கொண்டு பதியளித்த பன்னிருகை (வேல்)

வள்ளி மகிழுந் திரு மாது தெய்வயானையுடன்
புள்ளி மயிலிலேறி பொருந்தி விளையாடிவாரும் (வேல்)

மண்டல மெங்குமொரு மாங்கனிக்காக வலம்
கொண்டதுனக்கரிதோ குழந்தை வடிவாய் விளங்கும் (வேல்)

சேயன் சின்னையன் துதி செய்ய கருணும் பதி
தாயினும் கிருபை செய்யும் ஷண்முகனே யாளும் வடி (வேல்)

## திருப்புகழ்

ஆதிமதிநதி—என்ற மெட்டு.

ஆதி மதி நதி சோதிவார் சடை ஆடும் அரவணி புனைநாதன்
ஆறு பால் விழி ஆறு பொறி யெழ ஆறுமாமுக பவனுகி
நீதி தவறின சூரருதியர் நீருபடவிடும் வடிவேலா
நேயாகிய தேவாசுரா நீதிதந்தருள் அதிகாரா
காதலாய்த் திரு மால் மகிழ்ந்திடுங் காவியுடை மரு மகனுகி
கார் குழற்றிரு மாதர் கவினுர ஏறி மயிலினில் விளையாடி
தாதுலா மலர் சோலை சூழ்தரு தாலமாபுரி தனில் வாழும்
சால உன்புகழ் பாட சின்னையன் சாமி வந்தருள் பெருமாளே.

தாதாபாய் நௌரோஜி—என்ற மெட்டு.

பல்லவி

வேலனே கதிர் வடி வேலனே
மேலானபாத மெக்காலந் தருவாய் (வேலனே)

சரணம்

மூலாதாரத்தினிரை மேலாம்பதத்திலுறை
ஓதரு நிரை நாதமே எழுங் கீதமே மறை வேதமே வடி (வேலனே)

தொஹரா

ஓங்கார சத்தி உமைபால் குடித்து
உபதேசஞ் செய்த யோகா—
பூங்காவனத்தி லிதழ் மேவும் வள்ளி
புயமீதிருந்த போகா—
ஆங்கார சூரனின்ற தீங்கான குலத்தை வென்ற
அய்யனே அருள் மெய்யனே மிகு தய்யனே—
முருகையனே வாரும் (வேலனே)

தொஹரா

வேதாந்த மறைகளுக் கெட்டாத போதமாய்
விளங்கு மெஞ்ஞான வொளியே—
நாதாந்த மோனமாய் யெங்கு நிரை பொருளாகி
நாடறியதான வெளியே—
யெப்போது சற்குருவாய் தப்பாமல் நீ வருவாய்
என்னைய முரு நன்னயம் பெற சின்னையன் துதி—
பன்ன வந்திடும் (வேலனே)

மாகத மயிலமருங்குமர—என்ற வர்ண மெட்டு.

பல்லவி

அரகர சிவ சரஹணபவ வரந்தருபவனே
உன் அருமைப்பதந் தினந் தொழுதிட அருளுஞ்
சண்முகனே (ஓம் அர)

சரணம்

கருணை பொழியும் கிருபை வளருங் கதிர்வடிவேலா
அரியின் மருகா முருகா வேண்டும் வரமருள் சீலா—
உமை தருஞ் சிரு பாலா (ஓம் அர)

பச்சை மயிலில் பவனி வரும் பரமதயாளா—
கச்சணிந்த மங்கையர்கள் கருது நற்றோளா—
வரந்தரும் திருத்தாளா (ஓம் அர)

ஆலமுண்ட கண்டன் வேண்ட அருள் பன்னிரு கையா
சாலவுஞ் சின்னையன் துதிசெய்ய நீ மெய்யா
வராதிருப்ப தேனையா (ஓம் அர)

### சீராரும் தென்கழனி—வர்னமெட்டு.

பல்லவி

ஆறுமுகமானவனே அண்டர்துயர் தீர்த்தவனே
யேருமயிலேரி வா மெய்யா பன்னிருகையா ஆறு
மாயவலையில் சிக்கி மங்கய ரெழிலில் சொக்கி
காயம் விடுவதேனைய்யா இதென்ன பொய்யா ஆறு
சால உன்னடிக்கே தஞ்சம் தயவு செய்தாறுங்கொஞ்சம்
காலன் வராமல்காறைய்யா வீண் போக்காதையா ஆறு
வேறுபர முனக்குயிணை மேதினியிலுண்டோ துணை
காறும் சின்னையனைமெய்யா கதிர்வேலய்யா ஆறு

### கானகந்தனில் ஒருமானைதேடி—மெட்டு.

பல்ல்வி

ஆனைமுகர்க்கிளைய ஆறுமுகனாய்வந்த
அண்ணலே மணிவண்ணலே
நீ அண்டம் ஆயிரத்தெட் டண்டம் அரசுசெல
ஆண்ட சூரனுடலை மாய்த்தவா துயர்தீர்த்தவா
வைய்யக வெங்கணுமறை நொடிக்குள் வலமாய்வந்த
வீரனே கெம்பீரனே.
நீ வாறாய் கடைக் கண்ணினால் பாறாய் குறையனைத்தும்
தீறாய் கதிர்வடிவேலய்யா முத்தையா ஆனை

குறிஞ்சி நிலத்தில்வாழும் குறவர் மகளழகைக்
கண்டு மைய்யல் கொண்டு
நீ கொஞ்சி முத்தமிடடி வஞ்சி யென உரைத்து
கெஞ்சி யணைந்த சிங்கார ஒய்யாறா ஆனை

எப்போது நின்புகழை எத்திச் சின்னையன் துதி
செய்ய வினை நைய்ய
நீ இப்பாரில் மயில்மிசை ஒப்பாருமில்லையென
தப்பாமல் தரிசனம் தாறாய் நீயே நேறாய் ஆனை

செந்திமா நகரந்தனில்—என்கிற மெட்டு.

இன்னமுந் தயவில்லாதிருப்பது ஏனோ பராமுகமையா
எழில் வாழும் பன்னிரண்டு கையா

உனை எண்ணியே மனம் குண்ணுதேமிக திண்ணமாகவே [சண்முகா அருள்
என்றுமே ஜென்மம் எடுத்திடாத வண்ணம் இணையடி [தாருமையா
இந்த ஏழைமேற் கண்பாரையா
என் ஈசனே ஜெகதீசனே விசுவாசனே முருகேசனே அருள் இன்

புலியுமாயிளமயிலுமாய் பொலி நந்தியுமுமை யுருகொண்டு
புகழ் மாயூரநாதனைக் கண்டு
மிக பூசை பண்ணவும் மாசுதீர்த்தருள் ஈசனம்மையும் வாசமாகிய இன்

பனசைமா நகரந்தனில் மேவிய பாலகனும் முருகேசா
உண்மை பக்தர்க்கருள் பிரகாசா
இன்னம் பன்ன உன்பதம் நன்னயமுற சின்னய்யன் சொல முன்னம் வந்தருள் இன்

ஸ்ரீ ஆறுமுகப்பெருமான் போற்றி விருத்தம்.

திருமணிமுடி களாரும் சிறந்தரு முகங்கள் போற்றி
அருள்நிறை வதனந்தோறும் அமர்ந்திடும் நயனம் போற்றி
முருகவிழ் மாலையாரம் முத்தணி தோளும் போற்றி
தருவது யியற்கையான தாளிணை போற்றி போற்றி. (1)

எண்டிசை பரவுங்காவி இலகுப் பட்டாடை போற்றி
கண்டிகை யக்குமாலை கதிர்வடிவேலும் போற்றி
வெண்டிரு நூதியெங்கும் விளங்கு பன்னிருகை போற்றி
தொண்டர்கள் வினையகற்றும் துணையடி போற்றி போற்றி (2)

அருகு பூங்கொன்றை தும்பை அலர்ந்த வெள்ளருக்கணிந்த
கருமணி மிடற்றோன் வேண்ட கவான்மிசை யேறிமெள்ள
ஒருகுழை செவிகேட்டுள்ள முசிதமா யிரும்பூதெய்த
குருமுறைபாகச்சொன்ன குமரனே போற்றி போற்றி (3)

விண்ணவர் துதிசெய்தேற்ற விடைமிசையேறும் அண்ணல்
கண்ணுதற் பொறிகளாறாய் கவின்றரு குழவியாகி
பண்ணவர் துயரைநீக்கி பதியளித் தரசுதந்து
கண்ணனூர் மருகரான கந்தனே போற்றி போற்றி. (4)

வெள்ளை வாரணத்தோன் தந்த விளங்கிழையணிந்த மாதும்
வள்ளி மாதுமையினோடு வாகைகொண்டாடுகின்ற
புள்ளிவாய் மயிலின்மீது பொருந்திய கோலமாக
அள்ளிய நீருங்கையாய் அறுமுகா வருவாய் போற்றி. (5)

உம்பர்கள் துயரைநீக்க உமை திருவடிச் சிலம்பில்
வம்பவிழ் மாலைதாங்கி வருநவ வீரரான
தம்பிமார் தவிசின்மேய தரும்பணி வாசளித்த
செம்மலே சின்னையன்முன் சேவைதந்தாளும் போற்றி (6)

பல்லவி

மங்களம் ஜெய மங்களம் சுப மங்களம் சுப மங்களம்

சரணம்

அங்குசபாசாங்குசதர்க்கும் அருள்
ஐம்முக நாதர் சௌவுந்தரிக்கும் (மங்கள)

தங்க மயிலேறும் ஷண்முகற்கும் திரு
சார்ந்த வள்ளி தெய்வயானையற்கும் (மங்கள)

பக்தர்கள் சித்தர்கள் முத்தர்க்கும் மிகு
பண்ணவர் மண்ணுளோர் யாவர்க்கும் (மங்கள)

பனசை வாழ் சின்னையன் துதி யிதனை மிக
பாடினராடினர் கேட்பவர்க்கும் (மங்கள)

காளத்தி ஞானம்பிகை தனக்கு கருணை
செய் லக்ஷ்மி நாரணர்க்கும் (மங்கள)

### வாழி விருத்தம்

ஆதிமறை நூல்வாழி ஐங்கரன் சங்கரன்
அருள் சத்தி உமையும் வாழி

ஓதி ஷண்முகனும் வாழி மயில் வாழி
சேவலும் ஒய்யார வேலும் வாழி

பூதி கண்டிகை அடியர் பொருந்து மறையவராசர்
போற்று மற்றுளரும் வாழி

நீதி ஷண்முகன் கதை யியற்றினர் படித்தவர்கள்
நீடூழி வாழி வாழி.



### பனப்பாக்கம் ம—ா—ா—ஸ்ரீ P. வேதாசல பிள்ளை அவர்கள்

இயற்றிய

### நேரிசை வெண்பா

இங்கிதஞ்சேர் பனசை யெழில் சுப்ரமண்ணியன் மேற்
சங்கிதஞ்சேர் பாமாலை சாற்றினான்—தங்கமுறுஞ்
செங்குந்த கிஷ்டப்பன் செய்தவத்தால் வந்துதித்த
தங்கு புகழ் சின்னையவேள் தான்

டவுன் பிரஸ், காஞ்சிபுரம். (1133)